# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082893

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.த. பிரிவு நாமக்கல் | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 01/AC/2023 | Date: நாள் 03.03.2023

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் 23.02.2023 — Date to : நாள் வரை மதியம் சுமார் 12.00 மணி மற்றும் இரவு 07-15 மணி
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல் 02-03-2023 — Time to : நேரம் வரை காலை சுமார் 11-30 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.03.2023 — Time : நேரம் பகல் 13.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02-03-2023 volume-I — Time : நேரம் பகல் 13-00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 18 கி.மீ வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் த. முருகேசன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கராசு
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது-31
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் JCB ஓட்டுநர்
   (g) Address : முகவரி க.எண். 3/125 காளிச்செட்டிப்பட்டி புதூர், புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. குமரவேலு, கிராம நிர்வாக அலுவலர், புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

10. Total value of properties stolen / involved :
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துரைப்ப படுகிறது :

புகார் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

த. முருகேசன் 03/03/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

03/03/2023

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.03.2023 அ 09.00 மணி

Name: பெயர் M. சுபாஷிணி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊ.த.க. பிரிவு, நாமக்கல்.

**<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...</u>**

02.03.2023-ஆம் தேதி வியாழக்கிழமை பகல் 13.00 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது, திரு.T.முருகேசன் (வயது-21/2023), த/பெ. தங்கராசு (லேட்), கதவு எண்.3/125, காளிச்செட்டிப்பட்டிபுதூர், புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவர் நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு:-

நான் சேந்தமங்கலம் வட்டம், புதுக்கோட்டை கிராமத்தில் எனது அம்மா முத்துலட்சுமியுடன் வசித்து வருகிறேன். 9-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். JCB வாகனம் ஓட்டும் வேலை செய்து வருகிறேன். எனது அப்பா தங்கராசு கடந்த 21.01.2018-ந் தேதி இறந்துவிட்டார். என்னுடன் பிறந்த அக்காக்கள் தீபா மற்றும் சரிதா ஆகியோருக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது அப்பா இறந்தவுடன் அவரது இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொண்டோம். எனது அப்பாவிற்கு நான், எனது அம்மா மற்றும் எனது அக்காக்கள் ஆகியோர் வாரிசு ஆவோம். எனது தாத்தா இராமசாமி அவர்கள் புதுக்கோட்டை கிராம சர்வே எண். 280/21 இல் உள்ள சுமார் 1¾ ஏக்கர் நிலத்தை எனது அப்பா பெயருக்கு உயில் எழுதி வைத்தார். ஆகையால் அந்த நிலத்திற்கு உரிய பட்டா எண்.686 இல் எனது அப்பா பெயர் சேர்க்கப்பட்டது. எனது அப்பா இறந்துவிட்டதால் அந்த பட்டா எண் 686 இல் எனது அப்பா பெயருக்கு பதில் வாரிசுதாரர்களாகிய எங்களது பெயரை பட்டாவில் சேர்ப்பது சம்பந்தமாக கடந்த 18.02.2023-ஆம் தேதி மதியம் புதுக்கோட்டை கிராம நிர்வாக அலுவலகம் சென்று விசாரித்தேன். புதுக்கோட்டை கிராம நிர்வாக அலுவலராக குமரவேலு என்பவரும், அவருக்கு உதவியாளராக தங்கவேல் என்ற தனிநபரும் பணிபுரிந்து

வருகிறார்கள். என்னிடம் VAO திரு.குமரவேலுவும் அவரது உதவியாளர் தங்கவேல் அவர்களும் ஆன்லைனில் பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக விண்ணப்பம் செய்துவிட்டு, அந்த அப்ளிகேசனை கொண்டுவந்து கொடுக்கச் சொன்னார்கள். அதன்படி நான் எருமப்பட்டியில் உள்ள இ-சேவை மையம் சென்று ஆன்லைனில் பழைய பட்டா, எனது அப்பாவின் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை கொடுத்து பதிவு செய்தேன். அந்த விண்ணப்ப எண். 2023/0103/09/327166 ஆகும். அன்றைய தினமே அந்த ஆன்லைன் விண்ணப்பத்தை கொடுப்பதற்கு புதுக்கோட்டை VAO அலுவலகம் சென்றேன். அப்போது VAO அலுவலகத்தில் இல்லை. திரும்ப வரும் வழியில் அவரது உதவியாளர் திரு.தங்கவேல் அவர்களை பார்த்தேன். அவரிடம் ஆன்லைனில் விண்ணப்பித்த விபரம் சொன்னேன். அதற்கு அவர் திங்கட்கிழமை நேரில் அலுவலகம் வாங்க, வரும்பொழுது தட்சணை எடுத்திட்டு வாங்க அப்பொழுதுதான் வேலை முடியும் என்று சொன்னார். அதன்பின் நான் வேலைக்கு சென்றுவிட்டதால் VAO அலுவலகம் செல்லமுடியவில்லை. 23.02.2023-ஆம் தேதி எனது அம்மாவை VAO அலுவலகம் சென்று டாக்குமெண்ட்களை கொடுக்கச் சொன்னேன். எனது அம்மா 23.02.2023-ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு VAO அலுவலகம் சென்று VAO அவர்களை பார்த்து பட்டா மாறுதல் விண்ணப்பத்தை காண்பித்தபோது, VAO குமரவேலு ஆவணங்களை பார்த்துவிட்டு பணம் ரூ.3,000/- கொண்டுகிட்டு உங்க மகனை வந்து என்னை பார்க்கச்சொல்லுங்க என்று சொல்லியனுப்பியுள்ளார். அன்று மாலை வேலையை முடிச்சிட்டு வீட்டிற்கு வந்த என்னிடம் எனது அம்மா VAO பணம் கேட்ட விபரம் சொன்னார். நான் அன்று இரவு 07.15 மணிக்கு VAO குமரவேலு அவர்களின் செல்போன் எண்.9047871377-க்கு என்னுடைய செல்போன் எண் 9585235516-ல் இருந்து போன்செய்து பேசி எனது அம்மாவிடம் ரூ.3,000/- பணம் கொண்டு வரச் சொல்லியுள்ளது பற்றி கேட்டேன். அதற்கு VAO அவர்கள் என்னிடம் ஆம், அவ்வளவு பணம் செலவாகும் என்று சொல்லி என்னை

நேரில் வரச்சொன்னார். அதன்பின் நான் வேலைக்கு சென்றதால் உடனே VAO அலுவலகம் செல்லமுடியவில்லை. பின்னர் இன்று 02.03.2023-ஆம் தேதி காலை 11.25 மணிக்கு VAO அவர்களுக்கு போன் செய்து அவர் அலுவலகத்தில் உள்ள விபரம் தெரிந்து கொண்டு காலை சுமார் 11.30 மணிக்கு புதுக்கோட்டை VAO அலுவலகம் சென்றேன். அப்போது VAO குமரவேலு என்னிடம் நிலம் சம்பந்தமான விபரங்கள், வாரிசு சம்பந்தமான விபரங்கள், எனது தாத்தா மற்றும் எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் விபரம் ஆகியவற்றை கேட்டு தெரிந்துகொண்டு, ரூ.3,000/- கொடுத்தால் நான் உங்க அப்ளிகேசனை அப்ரூவல் கொடுத்து இன்னும் இரண்டு நாட்களில் பட்டாவில் பெயரை மாற்றிக்கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் அதற்கு நீங்க வேலையை முடித்துக்கொடுங்கள் அதன்பின் பார்க்கலாம், எனக்கு சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னேன். அதற்கு, VAO குமரவேலு அப்படி செய்ய முடியாது, ரூ.3,000/- கொண்டுவந்து கொடுங்க நான் இரண்டு நாளில் உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் என்னிடம் தற்பொழுது பணம் இல்லை என்று சொன்னதற்கு, நாளைக்கு கொண்டுவந்து கொடு என்று சொன்னார். அந்த சமயத்தில் அவருக்கு உதவியாளராக வேலை பார்த்து வரும் தங்கவேல் அவர்களும் அலுவலகத்தில் இருந்தார். எனக்கு புதுக்கொட்டை VAO குமரவேலு அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.3,000/- கொடுத்து பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட புதுக்கோட்டை VAO குமரவேலு அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்/- (xxxxx த.முருகேசன்) 02.03.2023.

மேற்கண்ட புகார் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கின் எதிரி திரு.குமரவேலு, கிராம நிர்வாக அலுவலர், புதுக்கோட்டை கிராமம், நாமக்கல் மாவட்டம் என்பவருக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட

உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 03.03.2023-ஆம் தேதி காலை 07.45 மணிக்கு நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.1/AC/2023,u/s 7(a)of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் வாக்குமூலம்,ஆகியவற்றை மாண்புமிகுதனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

03/03/23

(M.சுபாஷினி)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.